தி.மு.க. தலைவர்களைப் பற்றிய

தவறான சமூக வலைதளப் பதிவுகளை உடனே நீக்குக!

காவல் துறைக்கு - சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

சென்னை, அக்.16

தி.மு.க. தலைவர்களை பற்றிய தவறான பதிவுகள் குறித்து காவல் துறையில் பலமுறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

சமூக வலைதளங்களில், தி.மு.க. தலைவர்களைப் பற்றி, ஏஜ தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட தவறான பதிவுகளை உடனடியாக நீக்க வேண்டும் என காவல் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை கொண்டித்தோப்பைச் சேர்ந்த தி.மு.க. வழக்கறிஞர் நடராஜன், சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 'கடந்த சில மாதங்களாக சமூக வலைதளங்களில் தி.மு.க. தலைவர்களை பற்றியும், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பற்றியும் தவறான தகவல்களையும், பதிவுகளையும் வெளியிட்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், "ஏஜ தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட பதிவுகள், தனிப்பட்ட தலைவர்களை குறிவைத்து பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் உள்ளன. இது போன்ற பதிவுகள், இருதரப்பினருக்கும் இடையே மோதலை உருவாக்கும் சூழலையும் உருவாக்கி வருகிறது. இதுகுறித்து பலமுறை காவல் துறையிடம் புகார் அளித்தும் எந்த நடவடிக்கை இல்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஒரு சில புகார்களில் வழக்குப் பதிவு செய்தும் எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, தவறான அவதூறான பதிவுகளை நீக்க உத்தரவிட வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஏ.சரவணன், "இதுதொடர்பாக பலமுறை காவல் துறையில் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறிப்பாக, சென்னை மாநகர மேயர் பிரியா, காவல்துறை ஆணையரை சந்தித்து புகார் அளித்த பிறகும் காவல்துறை எந்த நடவடிக்கை எடுக்கவில்லை" என்று தெரிவித்தார்.

காவல்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அருள் அன்பு மணி, "தவறான பதிவுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவித்தார்.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, சமூக வலைதளங்களில், தி.மு.க. தலைவர்களைப் பற்றிய தவறான பதிவுகளை உடனடியாக நீக்க வேண்டும் என்றும், நீக்கப்பட்டது தொடர்பான அறிக்கையை காவல் துறை அக்டோபர் 29ஆம் தேதி சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறி உத்தரவிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில்

கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம்!

பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 17.10.2026 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு, சென்னை, அண்ணா அறிவாலயம், 'முரசொலி மாறன் வளாகத்தில்' உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.

அதுபோது, கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை -600 018
நாள்- 15.10.2026

நீர்வளத்துறை செயலாளர் எங்கே? ஆலோசகர் விஷ்ணு ரெட்டிக்கு அங்கே என்ன வேலை?

முதலமைச்சர் விஜய்யின் ஆந்திரா பயணத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை!

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிக்கை!

சென்னை, அக்.16–

முதலமைச்சர் விஜய்யின் ஆந்திரப் பயணத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை என்றும்; அந்தப் பயணத்தின் போது நீர்வளத்துறை செயலாளர் பங்கேற்காதது குறித்தும், முதலமைச்சரின் ஆலோசகர் விஷ்ணு ரெட்டிக்கு அங்கே என்ன வேலை என்றும் குறிப்பிட்டு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கிருஷ்ணா நீர் பங்கீடு, கோதாவரி காவிரி நதிநீர் இணைப்பு குறித்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவை முதலமைச்சர் விஜய் சந்தித்தாக தமிழக அரசின் சார்பில் செய்தி குறிப்பு வெளியிட்டிருக்கிறார்கள்.

முதலமைச்சர் விஜய்யின் வெளிநாடு மற்றும் வெளிமாநில பயணங்கள் எதுவுமே வெளிப்படைத்தன்மை கொண்டதாக இல்லை. நதிநீர் பற்றி மாநில முதலமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் எனில், இரண்டு முதல்வர்கள் தவிர சுற்றிலும் இரு மாநில நீர்ப்பாசனத் துறை அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

விஷ்ணு ரெட்டிக்கு அங்கே என்ன வேலை?

இரு மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோர் இருக்கும் குழுப் புகைப்படம் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அதில், தமிழக நீர்வளத்துறை செயலாளர் மற்றும் தமிழக அதிகாரிகள் யாருமே இல்லை. அமைச்சர்கள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா தவிர முதல்வர் விஜயின் ஆலோசகர் விஷ்ணு ரெட்டிதான் பிரதானமாக அமர வைக்கப்பட்டிருந்தார்.

நீர்வளத்துறைச் செயலாளரை விட விஷ்ணு ரெட்டிக்கு அங்கே வேலை? விஜய் ஆட்சி அமைந்த பிறகு ரூ.4.42 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பல தொழில் முதலீடுகள் ஆந்திராவிற்கு சென்றுவிட்டது. அது குறித்து விவாதிப்பதற்காக இருக்குமோ என்று மக்கள் யோசிக்கிறார்கள்.

முதலமைச்சர்கள் சந்தித்த கூட்டத்தில் அதிகாரிகள் தயாரித்து கொடுத்த கிருஷ்ணா நீர் தொடர்பான அறிக்கை எதையும் முதல்வர் வாசிக்கவில்லையே ஏன்? அப்படி வாசித்திருந்தால் அது தொடர்பான வீடியோ வெளியிடப்பட்டிருக்குமே? நதிநீர் இணைப்பு தொடர்பான கடித்தத்தை முதல்வர் விஜய் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவிடம் அளித்திருக்கிறார். அதைக் கொடுக்க ஏன் ஆந்திரா போக வேண்டும். தமிழ்நாட்டில் இருந்தே போஸ்ட் செய்திருக்கலாம்!

முதலமைச்சர் ஆந்திரா செல்வதற்கு இரண்டு நாட்கள் முன்பாக, பாலாறு வடிநில கோட்ட கண்காணிப்பு பொறியாளர், கிருஷ்ணா நீர் வழங்கும் பிரிவு செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட ஏழு பேர் விஜயவாடா சென்றிருக்கிறார்கள். அதிகாரிகள் எதிர்பார்த்து சென்றது போல ஆந்திர முதல்வரின் முகாம் அலுவலகத்தில் ஆய்வு கூட்டம் எதுவும் நடக்கவில்லை. அதனால் ஆந்திரா ஸ்பெஷல் உணவுகளை சாப்பிட்டுவிட்டு திருப்பதியில் சிறப்பு தரிசனம் முடித்துவிட்டு தமிழக நீர்வளத் துறை அதிகாரிகள் வெறும் கையோடு திரும்பிவிட்டார்கள். இன்றைக்கு நாளிதழிலும் செய்தி வெளியாகியிருக்கிறது.



கோதாவரி - கிருஷ்ணா - காவிரி நதிநீர் இணைப்பு திட்டம் பற்றி பேசினார்கள் என்றால், அதற்கான வரைவு போடப்பட்டதா? சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க முடிவு எடுத்தார்களா? கோதாவரி காவிரி நதிநீர் இணைப்புக்காக பிரதமரை இருமாநில முதல்வர்களும் சந்தித்து கோரிக்கை வைப்பது தொடர்பாக இறுதி செய்யப்பட்டதா? இப்படி எந்த தகவலும் இல்லாமல் மொட்டை தாத்தா குட்டையில் விழுந்தது போல தமிழக அரசு செய்தி குறிப்பு வெளியிட்டிருக்கிறது.

மாநிலப் பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தை நடத்த போவதாகச் சொல்லி முதல்வர் விஜய் தனிப்பட்ட நிகழ்வுகளில் பங்கேற்பதை வழக்கமாகவே வைத்திருக்கிறார்.

அரிசி விலை விண்ணை எட்டுகிறது!

காவிரி பிரச்சினையை பேசப் போகிறேன் என்று கர்நாடகா சென்றார். இவரை நம்பி விவசாயிகள் நெல் விதைத்தார்கள். இப்பொழுது டெல்டா காய்ந்து கிடக்கிறது. போராட்டங்கள் வெடிக்கின்றன. நெல்வரத்து குறைந்து அரிசி விலை விண்ணை முட்டுகிறது.

முதலீட்டை ஈர்ப்பதற்காக லண்டன் செல்வதாகச் சொல்லி அங்கே கார் ரேஸில் பங்கேற்றார். 5 நாட்கள் பயணத்தில் 3 நாட்கள் என்ன செய்தார்? என்பது இன்று வரை கேள்வியாகவே உள்ளது.

நேற்று ஆந்திரா. நாளை கேரளம். இப்படி தனிப்பட்ட பயணங்களுக்கு மாநில நலன் என்ற ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்கிறார். தனிவிமானத்தில்தான் சென்று வருகிறார். அவர் சொல்வதைப் போலவே சொல்ல வேண்டுமென்றால் ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் செய்ய ஊர் ஊராக கிளம்பி கொண்டிருக்கிறார்.

"இந்த அரசின் கொள்கைகளும் செயல்பாடுகளும் மக்களுக்கு நூறு சதவீதம் வெளிப்படையானதாகவே இருக்கும். எந்தவொரு திட்டமும் மூடிய கதவுகளுக்குப் பின்னால் ரகசியமாக விவாதிக்கப்படாது" என்று தான் முதலமைச்சராக பதவியேற்ற மேடையிலேயே பிரசங்கம் செய்தார். பேசும் போதெல்லாம் Transparency பற்றி பாடம் எடுத்தது பொய்யா?

தான் தோன்றித்தனமாக செயல்படுகிறார் முதல்வர்!

அரசு பணத்தில் செல்கிறவர், அரசின் பணியை மேற்கொண்டதாக சொல்லக் கூடியவர், என்ன பணியை மேற்கொண்டார்? என்பதை மக்களுக்கு விளக்க கூடிய தார்மீக கடமையும் பொறுப்பும் முதல்வருக்கு உண்டு. என்னை யாருமே கேள்வி கேட்க முடியாது என்கிற தான் தோன்றித்தனமாக நடந்து கொள்வது என்பது ஜனநாயகத்தில் ஏற்புடையதாக இல்லை. நினைத்ததை எல்லாம் செய்ய முதலமைச்சர் விஜய் இந்த நாட்டின் மன்னரோ, இளவரசரோ அல்ல. மக்கள் வாக்களித்து தேர்வு செய்யப்பட்ட முதலமைச்சர்.

வாக்களித்த மக்களுக்கு அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்பது தார்மீக கடமை. ஆனால் முதலமைச்சர் விஜய் அரசு முறை பயணங்களை மேற்கொள்ளும் போது பின்பற்றப்படும் மரபுகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; பாண்டிச்சேரியிலே இருந்து திருச்சி போற, தமிழ்நாட்டின் அரசுப் பேருந்தில் எல்.இ.டி. திரையிலே, தி.மு.க. விற்கு எதிரான த.வெ.க.வின் வாசகங்கள் இருந்ததாமே அதுக்கு யார் காரணமா இருந்திருப்பாங்க?

பட்டணம் : **ஆமாமய்யா; இதுவரைக்கும் நடவடிக்கை எடுக்காததைப் பார்க்கும்போது, இது த.வெ.க.வினருடைய வேலையாத்தான் இருக்குமோன்னு தோணுது. பார்ப்போம் இந்த 'பொடிமாஸ்' அரசு யார் மீது ஆக்சன் எடுக்குதுன்னு.**

மளிகைப் பொருட்களுக்கான செலவு மாதம் ரூ.2 ஆயிரம் அதிகரிப்பு!

விலைவாசி உயர்வால் தவித்து வரும் தமிழ்நாட்டு மக்கள்!

'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, அக். 16 -

மளிகைப் பொருட்களுக்கான செலவு மாதம் ரூ.2 ஆயிரம் அதிகரித்துள்ளது. விலைவாசி உயர்வால் தமிழ்நாட்டு மக்கள் விழிபிதுங்கி தவித்து வருகின்றனர் என்று 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

ரிசர்வ் வங்கி, ரெப்போ வட்டி விகிதத்தை 5.25 சதவீதத்தில் இருந்து 5.5 சதவீதமாக கடந்த வாரம் உயர்த்தியது. இதனால் வங்கிகளில் வாங்கிய வீட்டுக் கடன், வாகனக் கடன், தனிநபர் கடன் போன்ற வற்றுக்கான வட்டி விகிதம் உயரும் அபாயம் இருக்கிறது. நாட்டின் வளர்ச்சி விகிதம் சீராக இருந்தாலும், ரெப்போ வட்டி விகிதத்தை உயர்த்தியதற்கான காரணமாக பணவீக்கத்தை ரிசர்வ் வங்கி குறிப்பிட்டிருந்தது. பணவீக்கம் என்றால் அனைவருக்கும் புரியும் வகையில் விலைவாசி உயர்வு என்று எளிமையாகக் குறிப்பிடப்படுகிறது.



ஒரு நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை தொடர்ந்து உயர்வதையே பணவீக்கம் என்கிறார்கள். இதனால் பணத்தின் வாங்கும் திறன் குறைகிறது.

அதாவது, முன்பு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வாங்கிய பொருட்களை இப்போது வாங்குவதற்கு அதிகப் பணம் தேவைப்படுகிறது. 'விலைவாசி உயர்வு' என்று குறிப்பிடப்படுகிறது.

நாட்டின் விலைவாசி நிலவரத்தை மத்திய அரசின் புள்ளியியல் அமைச்சகம் அவ்வப்போது ஆய்வு செய்து அறிவித்து வருகிறது. இதற்காகப் பல்வேறு பொருட்களின் "விலைகளை ஆய்வு செய்து, நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை வெளியிடுகிறது. அதன்படி, கடந்த "செப்டம்பர் மாதத்தில் சில்லறைப் பணவீக்கம் 5.54 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது கடந்த 21 மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்வாகும். இது அகில இந்திய சராசரி என்றாலும் தமிழ்நாட்டில் தான் மிக அதிகமாக 6.81 சதவீதமாக பதிவாகியுள்ளது. ஆக இந்தியாவிலேயே மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் விலைவாசி உயர்வு அதிகமாகும். யூனியன் பிரதேசங்களில் புதுச்சேரியில் 6.8 ஆக பணவீக்கம் இருக்கிறது. பணவீக்கம் 2 சதவீதத்தில் இருந்து 6 சதவீதத்துக்குள் இருக்கவேண்டும். அந்த அளவை தமிழகமும், புதுச்சேரியும் தாண்டிவிட்டன.

விலைவாசி உயர்வால் தமிழக மக்கள் தவித்துவருகின்றனர். அடுத்து தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகள் நெருங்கி வருவதால் என்ன செய்வதென்று தெரியாமல் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

ராக்கெட் வேகத்தில் எகிறிய இந்த விலைவாசி உயர்வுக்கு உணவுப் பொருட்களின் விலை அதிகரித்திருப்பதுதான் முக்கியக் காரணமாகும். உருளைக்கிழங்கைத் தவிர, கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட மற்ற 41 அத்தியாவசியப் பொருட்களின் விலையும் கணிசமாக உயர்ந்திருக்கிறது.

குறிப்பாக, வெங்காயத்தின் விலை மிக அதிகமாக உயர்ந்துள்ளது. சர்க்கரை, சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றின் விலையும் கூடியிருக்கிறது. கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடும்போது, செப்டம்பர் மாதத்தில் உணவுப் பணவீக்கம் 7.74 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

அரிசி, துவரம் பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை மக்கள் வாங்காமல் தவிர்க்கவும் முடியாது. இவற்றின் விலை உயர்வுடன் காய்கறிகளின் விலை உயர்வும் சேரும்போது, குடும்பங்களின் மாதாந்திரச் செலவுகள் வரம்பை மீறிச் செல்கின்றன. இதனால் நடுத்தரக் குடும்பங்கள் தங்கள் வருமானத்துக்குள் குடும்பச் செலவுகளை அடக்க முடியாமல் சிரமப்படுகின்றன.

விலைவாசி உயர்வுக்கு சுட்டி பையன் எல் நினோவின் ஆட்டத்தால் பருவமழை பொய்த்தது முக்கியக் காரணமாகும். விலைவாசி உயர்வு அனைவரையும் கடுமையாக பாதித்துள்ளது.

நடுத்தரக்குடும்பத்தைச் சேர்ந்த இல்லத்தரசி ஒருவர், "மாதந்தோறும் வாங்கும் மளிகைப் பொருட்களுக்கான செலவு மட்டும் ரூ.2 ஆயிரம் அதிகரித்துள்ளது. காய்கறி விலை உயர்வையும் சேர்த்தால், இந்த மாதம் பற்றாக்குறை பட்ஜெட்தான். அடுத்து தீபாவளிச் செலவும் இருக்கிறது. எப்படித்தான் சமாளிக்கப் போகிறோமோ?" என்று வேதனையுடன் தெரிவித்தார்.